**சுருக்கம்**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 2023–2024ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவ / மாணவியருக்கு 25 இலட்சம் ரூபாய் செலவில் வினா வங்கி வழங்குதல் – நிதி ஒப்பளிப்பு செய்து ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிந2) த்துறை**

**அரசாணை (நிலை) எண். 61** **நாள் 14.07.2023**

**திருவள்ளுவர் ஆண்டு 2054**

**சோபகிருது, ஆனி 29**

**படிக்கப்பட்டது :-**

பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரிடமிருந்து பெறப்பட்ட கடித எண்.பி2/3044/2022, நாள் 24.04.2023.

-------

**ஆணை:**

2023–2024ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் அவர்களால் "பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் விடுதிகளில் தங்கிப் பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதவுள்ள 26,433 மாணவ / மாணவியருக்கு தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் வினா வங்கி 25 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்" என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. மேலே படிக்கப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கடிதத்தில் தமிழ்நாடு மாநிலப் பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாக ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் அத்துறை விடுதிகள் மற்றும் பள்ளிகளில் பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதவுள்ள மாணவ / மாணவியர்க்கு மேற்கல்வி பயில ஏதுவாக வினா வங்கிகள் வழங்கப்பட்டு வருவதைப் போன்று இத்துறையின் கீழ் இயங்கும் விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதவுள்ள 26,433 மாணவ / மாணவியர்க்கும் வினா வங்கிப் புத்தகங்கள் வழங்கலாம் என பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. இவ்வினா வங்கிகளை வழங்க ஏதுவாக, தமிழ்நாடு பாடநூல் கழகத்திடம் பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் வினா வங்கி புத்தகத்திற்கான விலை மற்றும் மொத்த செலவின விவரங்களை பின்வருமாறு தெரிவித்து ரூ.25,00,000/-ற்கு நிதி ஒப்பளிப்பு வழங்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

| Sl. No | Class | Subject | Price per copy (Rs.) | No. of Copies | Cost (Rs) |
|---|---|---|---|---|---|
| 1 | 10th Model Question papers | Tamil, English, Maths, Science, Social Science | 75 | 12621 | 946575 |
| 2 | 12th Model Question papers | | | | |
| | +2 Science Group | Tamil, English, Physics, Chemistry, Biology, Computer Science | 75 | 8623 | 646725 |
| | +2 Arts Group | Tamil, English, Economics, Commerce, Accountancy, Business Maths and Statistics | 100 | 5189 | 518900 |
| | +2 Maths Solution | Mathematics - Questions and Solutions | 80 | 2008 | 160640 |
| | Total | | | | 2272840 |
| | Freight Charges (including Loading and Unloading Charges 10%) | | | | 227284 |
| | Grand Total | | | | 2500124 (or) 25,00,000 |

4. மேற்காணும் சூழ்நிலையில், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு கவனமுடன் ஆய்வு செய்து பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நல விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதவுள்ள 26,433 மாணவ / மாணவியர்க்கு தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகம் மூலம் வினா வங்கி புத்தகங்களை வழங்குவதற்காக ரூ.25,00,000/-(ரூபாய் இருபத்து ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்படவேண்டும்:

**பிற்படுத்தப்பட்டோர் நலன் (ரூ.1369299/-)**

2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03– பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் JE மெட்ரிகுலேசனுக்கு முந்தைய வகுப்புகளில் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை – 368 புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிற்கு ஆகும் செலவு – 01 புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிற்கு ஆகும் செலவு.
(DPC 2225–03–277– JE –36801)

**மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன் (ரூ.1122209/-)**

2225 ஆதி திராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 03– பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் KE மெட்ரிகுலேசனுக்கு முந்தைய வகுப்புகளில் பயிலும் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு படிப்புதவித் தொகை – 368 புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிற்கு ஆகும் செலவு – 01 புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிற்கு ஆகும் செலவு
(DPC 2225–03–277–KE–36801)

**சிறுபான்மையினர் நலன் (ரூ.8492/-)**

2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – 04– சிறுபான்மையினர் நலன் – 277 கல்வி – மாநிலச் செலவினங்கள் JB சிறுபான்மையினர் மாணவரில்லங்கள் – 368 புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிற்கு ஆகும் செலவு –01 புத்தகங்கள், நோட்டுப்புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிற்கு ஆகும் செலவு
(DPC 2225–04–277–JB–36801)

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ.25,00,000/–ம் 2023–2024–ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும் மேற்கண்ட செலவினத்திற்கு 2023–2024 ஆம் ஆண்டிற்காண துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினைப் பெற்று வழங்கிட பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும் பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட இக்கூடுதல்

செலவினத்தை 2023–2024–ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய வரைவு விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதித் திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவையும் தவறாது உரிய நேரத்தில் நிதி [பி, மி.பி (ம) சி.ந./வ.செ.பொ/1] துறைக்கு அனுப்பி வைக்குமாறு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.25509/ நிதி(பி,மிபி(ம)சிந)/2023, நாள் 07.07.2023- ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.488 (நானூற்று எண்பத்தெட்டு) (IFHRMS ASL No.2023070488)

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ரீட்டா ஹரிஷ் தக்கர்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
ஆணையர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை– 5.
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை–5.
இயக்குநர், சிறுபான்மையினர் நலன், சென்னை–5.
மாநில கணக்காயர், சென்னை–18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 1), சென்னை–18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை– 2), சென்னை–18. (பெயரில்).

<u>நகல்</u>
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்) அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, செயலாளர் அவர்களின் முதுநிலை முதன்மை தனிச்செயலர், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சிறப்புச் செயலாளர் அவர்களின் நேர்முக எழுத்தர், சென்னை –9.
நிதி (பி.மி.பி மற்றும் சிந/வ.செ.பொ 1/வ.வ.)த்துறை, சென்னை – 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல(பிந3)த் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உபரி

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

சரண் 14/07/2023

**பிரிவு அலுவலர்**

14.07.2023